padippakam



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

8

யாழ்ப்பாணத்து நிலப் பிரபுத்துவ வர்க்கம், ஆங்கிலேய எஜமானுக்கு அதிக விசுவாசத்துடன் நடந்துகொண்டு 'சேர்' பட்டத்தையும், இதர சலுகைகளையும் பெற்றுக் கொள்வதிலும் தமிழீழ மக்கள் போர்த்துக்கேயர் காலத்தில் இழந்துவிட்ட தங்கள் இறைமையை மீட்டெடுக்க தமிழ் தேசிய இனம் என்ற அடிப்படையில் ஒன்று பட்டு காலனிய எதிர்ப்பு யுத்தம் அல்லது விடுதலைப் போர் ஒன்றுக்கு முயன்று விடாதபடி [illegible] ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் அவர்களைப் பிரித்து வைப்பதிலும் அதிக கவனம் செலுத்திக் கொண்டிருந்த நேரத்தில், ஆங்கிலேய காலனிய அரசு தனது நிர்வாக வசதிக்காக தமிழர்களுடைய பாரம்பரிய பிரதேசங்களைக் கூறுபோட்டு சிங்களப் பகுதியுடன் இணைத்தது.

கோல்புறூக் - கமரன் ஆணைக்குழு காலத்திலேயே இந்த நடவடிக்கைக்கான அடித்தளம் இடப்பட்டுவிட்டது. 1833ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ம் திகதி யாழ்ப்பாண அரசு, கண்டி அரசு, கோட்டை அரசு மூன்றையும் 'சிலோன் அரசு என்று ஒன்றாக இணைத்த போது இலங்கைத் தீவு வடமாகாணம், கிழக்குமாகாணம், மத்தியமாகாணம், மேல்மாகாணம், தென் மாகாணம், என்ற ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அப்போது மூன்று சிங்கள மாகாணங்களுக்கு இரண்டு தமிழ் மாகாணங்கள் என்ற அடிப்படையிலான நிர்வாக அலகு இருந்தது.

1845ல் மேல் மாகாண நிர்வாகத்தின் கீழிருந்த நீர் கொழும்பு, சிலாபம், புத்தளம் ஆகிய பகுதிகளில் 85 முதல் 90 வீதம் வரை தமிழ் மக்களே வாழ்ந்து வந்தனர். ஆங்கிலேயர்கள் நிர்வாக வசதியை காரணங்காட்டி சிலாபத்தையும், புத்தளத்தை யும் மேல் மாகாணத்திலிருந்து பிரித்து முழுசிங்களப் பகுதியான குருநாகலை அதனுடன் இணைத்து வடமேல் மாகாணம் என்ற ஒன்றை உருவாக்கினர்.

அதுபோல 1873-இல் வட மாகாணத்திலிருந்து அநுராதபுரத்தையும், கிழக்கு மாகாணத்திலிருந்து தம்மங்கடவையையும் பிரித்து வட மத்திய மாகாணம் என்ற ஒன்றை உருவாக்கினர். அநுராதபுரம் பௌத்த சிங்களத்து தலைநகரம் என்று மகாவம்சம் சொல்லியிருந்த போதிலும் எல்லாளன் ஆட்சிக் காலத்துக்கு முன்பிருந்தே அங்கு தமிழர்கள், குறிப்பாக தமிழ் பௌத்தர்கள் பெரும்பான்மையின ராக வாழ்ந்திருக்கிறார்கள். கி.பி 10 ஆம் நூற்றாண்டில் சோழர்களால் அந்நகரம் அழிக்கப்பட்டபோது அங்கிருந்த பெரும்பாலான பௌத்த சிங்களவர்கள் தெற்குநோக்கி நகர்ந்து விட்டார்கள்.

கி.பி 1660ம் ஆண்டு கண்டி அரசனால் பிடித்து சிறை வைக்கப்பட்ட ஆங்கிலேயரான றோபேட் நொக்ஸ் (Robrt Knox) 1679 ஆம் ஆண்டு சிறையிலிருந்து தப்பி அநுராதபுரத்திற்கு வந்தபோது, அங்கிருந்த மக்கள் சிங்களம் தெரியாதவர்களாக இருந்ததாகவும், அங்கிருந்தவர்களின் ஆட்சித் தலைவனும் மக்களும் தமிழ் மொழியையே பேசியதால், அவர்களுடன் பேசி உதவி கோருவதற்குதான் ஒரு மொழிபெயர்ப்பாளனை தேட வேண்டியிருந்த தென்றும் தனது வரலாற்றுக் குறிப்பில் எழுதி வைத்துள்ளார்.

உண்மையில் றோபேட் நொக்ஸின் காலத்தில் அநுராதபுரம் வன்னியன் ஆட்சிக்குக் கீழேயே இருந்தது. அங்கு தமிழ் மக்களே பெரும்பான்மையினராக வசித்து வந்தனர்.

களை நிறைவேற்றிக் கொண்டனர்.

அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்ட வடமத்திய மாகாணத்தை அவர்கள் உருவாக்கி வைத்ததன் மூலம் பௌத்த சிங்களத் தலைநகரம் என்ற தங்கள் பழம் பெருமையை மீட்டதுடன் தமிழீழ நிலப் பரப்பின் கணிசமான பகுதியை ஆக்கிரமித்து சிங்களவர்களை அங்கு வந்து குடியேறுமாறு தூண்டி அதையொரு சிங்கள மாகாண மாக்கினர்.

அவ்வாறே குருநாகலையைத் தலைநகராகக் கொண்ட வடமத்திய மாகாணத்தை உருவாக்கிய போது, குருநாகலிலும் அதையொட்டிய பகுதிகளிலும் பௌத்த சிங்களவர்களை குடியேறும்படி தூண்டி சிலாபத்திலும், புத்தளத்திலுமிருந்த தமிழர்களையும் முஸ்லீம்களையும், சிறுபான்மையினராக்கி அதையும் சிங்கள மாகாணமாக்கிக்

1889ல் இரத்தினபுரி, கேகாலைப் பகுதிகளை ஒன்றிணைத்து சப்பிரகமுவா மாகாணம் உருவாக்கப்பட்டது.

1889 இல் இலங்கை ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டபோது 7 சிங்கள மாகாணங்களுக்கு 2 தமிழ் மாகாணங்கள் என்ற அடிப்படையில் தமிழர்கள் சிறுபான்மையாக்கப்பட்டனர்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தமிழர்கள் என்ற அடிப்படையில் மத்திய மாகாணத்தில் பெரும்பான்மையினராக இருக்கக்கூடாது என்பதற்காகவே பதுளை அதிலிருந்து பிரிக்கப்பட்டது.

இந்த மாகாணப்பிரிவினைகளின் மூலம் தமிழீழத்தின் பெரும் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டு திட்டமிட்ட அடிப்படையில் சிங்களப் பிரதேசங்களாக ஆக்கப்பட்டபோது அதை எதிர்த்துக் குரல் கொடுப்பதற்கும் எதிர்த்துப் போராடுவதற்கும் தமிழர் தரப்பில் அப்போது யாரும் இருக்கவில்லை.


இந்த இடத்திலே ஒரு கேள்வி எழுகிறது. ஆங்கிலேயர்கள் இலங்கைக்கு வந்த காலத்திலிருந்து அவர்களுக்கு மிகவும் நன்றியுடனும் விசுவாசத்துடனும் நடந்து கொண்டவர்கள் தமிழர்

இந்தப் போராட்டங்கள், பௌத்த சிங்கள இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், சிங்களவர்கள் மத்தியில் ஆங்கிலேய காலனிய எதிர்ப்புணர்வைத் தூண்டுவதற்கும், சிங்கள இனம் என்ற அடிப்படையிலும் பௌத்த பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்ற அடிப்படையிலும் அவர்கள் ஒன்றுபடுவதற்கும் பெரிதும் காரணமாக இருந்தன.


ஆங்கிலேய அரசு அவர்களுக்கு நன்றி விசுவாசத்துடன் நடந்து கொண்ட தமிழர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டு அவர்களை அதிகளவுக்கு எதிர்த்த சிங்களவர்களுக்கு சாதகமாக நடந்து கொண்டது ஏன்? என்பதே அந்தக் கேள்வி.

உண்மையில் இதுதான் ஆங்கிலேயர்களுடைய பிரித்தாளும் தந்திரம்.

பௌத்த சிங்கள இனவாதிகள் ஆங்கிலேய எதிர்ப்பை மட்டும் அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. அதை விட தமிழர்கள் மீதான எதிர்ப்புணர்வு அவர்களிடம் அதிகமாகவே இருந்தது. இதை நன்றாகப் புரிந்து கொண்ட ஆங்கிலேயர்கள், அவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சில உரிமைகளை வழங்குவதன் மூலம் தங்களுக்




இலங்கை – 1833




இலங்கை – 1889

யாழ்ப்பாண நிலப்பிரபுக்கள் பிரித்தானிய எஜமானர்கள் வழங்கிய அரச ஊழியர் பதவிகளுக்காக அவர்களது காலடியில் வீழ்ந்து கிடந்த நேரத்தில், மத சுதந்திரம் என்ற பெயரில் கபடத்தனமாக அவர்கள் வழங்கிய சுதந்திரத்தை பயன்படுத்திக்கொண்டு, ஆரிய பார்ப்பனியத்துக்குப் புத்துயிரூட்டிக் கொண்டிருந்த நேரத்தில், பௌத்த சிங்கள இனவாதிகளும் மிகவும் விழிப்புடனும் சாதுரியத்துடனும் செயற்பட்டு, வெளிப்படையாக தங்களுடைய பௌத்த சிங்கள மேன்மைக்காகப் போராடிக் கொண்டு, மறுபுறத்தில் காலனிய அரசியல் தமிழர்களை விட மேல் நிலை பதவிகளில் இருந்த சிங்களவர்கள் மூலமாக தங்கள் நோக்கங்

கொண்டனர்.

1845 வடமேல் மாகாணம் உருவாக்கப்பட்ட போது 4 சிங்கள மாகாணங்களுக்கு 2 தமிழ் மாகாணங்கள் என்ற அடிப்படையிலும் 1873 இல் வடமத்திய மாகாணம் உருவாக்கப்பட்ட போது 5 சிங்கள மாகாணங்களுக்கு 2 தமிழ் மாகாணங்கள் என்ற அடிப்படையிலும் நிர்வாக அமைப்பு விகிதாசாரம் மாறிப் போனது.

1886 இல் மத்திய மாகாணத்திலிருந்து பதுளையையும் தென் மாகாணத்திலிருந்து புத்தல (Buttla) வெல்லவாய ஆகிய பகுதிகளையும் கிழக்கு மாகாணத்தின் சில கிராமங்களையும் இணைத்து ஊவா மாகாணம் உருவாக்கப்பட்டது.

கள். பண்டாரவன்னியனைத் தவிர தமிழர்கள் தரப்பிலிருந்து வேறு யாருமே அவர்களை எதிர்த்துப் போராடவில்லை.

ஆறுமுகநாவலர் ஆங்கிலேயர் ஆட்சி அகற்றப்பட வேண்டும், தமிழர்கள் எல்லாம் ஒன்றுபட்டு அவர்களுக்கெதிராகப் போராட வேண்டும் என்று கூறியதில்லை.

ஆனால் சிங்களவர்கள் தரப்பில் அவ்வாறில்லை, கெப்பிட்டிப்பொல, கொங்கலகொட பண்டா, வீர புரன் அப்பு ஆகியோர் ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதப் போராட்டமும், அநகாரிக தர்மபாலா, வாலி சிங்க, ஹரிச்சந்திரா, குணானந்த தேரோ முதலானோர் அரசியல் போராட்டமும் நடத்தினர்.

கெதிரான எதிர்ப்பை மழுங்கடிக்கச் செய்யும் அதே நேரத்தில் தமிழர்களுக்கு சில சலுகைகளை வழங்குவதன் மூலம் தங்களை விட அவர்கள் அதிகம் வசதியாக இருக்கிறார்கள். என்ற பொறாமை உணர்வை சிங்களவர்களுக்குத் தூண்டி விடுவதன் மூலம் தமிழுக்கு எதிரான பௌத்த சிங்கள இனவாதத்தை வளர்த்து விடுவதற்கு முயன்றார்கள். சிங்களவர்களையும் தமிழர்களையும் மோதிக்கொள்ள வைப்பதன் மூலம் தாங்கள் பிரச்சினையின்றி ஆட்சி செய்யலாம் என்று அவர்கள் நம்பினார்கள்.

– நக்கீரன்